**செய்தி வெளியீடு எண் : 286** **நாள்: 27.02.2022**

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி**

பத்திரிகைத் துறையில் நீண்ட அனுபவமும், பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா (PTI), தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட பத்திரிகை நிறுவனங்களில் 45 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்துள்ள மூத்த பத்திரிகையாளர் திரு. வி.கே.சந்திரமௌலி அவர்கள் வயது முதிர்வின் காரணமாக 92ஆவது வயதில் மரணமடைந்தார் என்ற செய்தியறிந்து வேதனை அடைந்தேன். பத்திரிகைத் துறையில் திரு. வி.கே.சந்திரமௌலி அவர்கள் விளையாட்டுத் துறை தொடர்பான செய்திகளை வழங்குவதில் தனி முத்திரை பதித்தவர் ஆவார்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பத்திரிகைத் துறையை சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**